செய்தி வெளியீடு எண்: 390 நாள்: 02.07.2019

# செய்தி வெளியீடு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) மாணவர்கள் நேரடி சேர்க்கை அறிவிப்பு

2019–ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் மாணவர்கள் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்பட்டன.

விண்ணப்பதாரர்கள் தரவரிசை பட்டியல் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தரவரிசை பட்டியல்படி மாணவர்கள் சேர்க்கைக்கான மாவட்ட கலந்தாய்வு 05.07.2019 முதல் 13.07.2019 முடிய மாவட்ட நோடல் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கலந்தாய்வு நடைபெறும் நாள், நேரம், இடம் உள்ளிட்ட விவரங்கள் இதே இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இணையதள விண்ணப்பத்தின் போது உள்ளீடு செய்த அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள / குறுஞ்செய்தி வாயிலாக பெறப்பட்ட கலந்தாய்வு நிரலின்படி விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டு Single Window முறையில் தாங்கள் சேர விரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யலாம்.

இது குறித்து மேலும் விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம் அல்லது தங்களுக்கு அருகாமையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடர்பு கொண்டு விவரம் பெறலாம்.

தொலைபேசி எண் : 044–22501006

Email ID : detctsection@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**